Registered as a News Paper     பக்கங்கள்: 04     விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி

நாதம் 03     திருவள்ளுவர் ஆண்டு 2023     ஆவணி 23     (08 - 09 - 1992)     செவ்வாய்க்கிழமை     ஓசை 203

## தவறவிட்ட பொருள்களை பெற்றுக் கொள்ளவும்

(நமது நிருபர்)

நல்லூர் கந்தன் உற்சவ காலத்தில் ஆலயப் பிரதேசத்திற்குள் கண்டெடுக்கப்பட்ட நகைகள், கைக்கடிகாரங்கள், பணப்பைகள், துவிச்சக்கரவண்டித் திறப்புகள் என்பன தவறவிட்டவர்களால் இதுவரை மீளப்பெறப்படாமல் தமிழீழக் காவல்துறை பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது. இவற்றை கைவிட்ட அடியார்கள் தகுந்த ஆதாரம் காட்டி இவற்றை தமிழீழக் காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிவித்துள்ளார்.

# அரசிற்கு பெரும் நிதி நெருக்கடி

# 800 கோடி ரூபா அவசர தேவை

## சிரேஷ்ட அதிகாரிகள் குழு உதவிகோரி அமெரிக்காவிரைவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசிற்கு ஏற்பட்டுள்ள பெரும் நிதி நெருக்கடியைத் தொடர்ந்து, உடனடி கடனுதவியை உலக வங்கியிடமிருந்தும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் விசேட உயர் மட்டக் குழுவொன்று இம் மாத இறுதியில் அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் செல்லவுள்ளதாகத் தெரியவருகின்றது. அவசர தேவைக்கென 800 கோடி ரூபாவை கடனாகக் கோரவுள்ள இவ் விசேட அதிகாரிகள் குழு, இச்சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு பொருளாதார கட்டமைப்பில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் குறித்தும் ஆலோசிக்கும் என திறைசேரி வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

அதி உயர் அதிகாரங்கள் கொண்ட உலக வங்கியின் தூதுக்குழுவொன்று கடந்த ஜூலை 4-ம் திகதி முதல்20-ம் திகதி வரை கொழும்பில் தங்கியிருந்துகடன்கள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியது தெரிந்ததே. அப்போது உலக வங்கி சிறிலங்கா மீது கடுமையான நிபந்தனைகளையும் விதித்திருந்தது. அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை சிறிலங்கா இவ் வருடத்திற்கான உலக வங்கியின் உதவியைப் பெறும் ஆலோசனைக் கூட்டம் இம் மாதம் 21-ம் திகதியிலிருந்து 24-ம் திகதிவரை நடைபெறலாம் எனவும் அக் கூட்டத்திற்கு நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கு

## செலவுத் தொகையாக 9 லட்சத்து 6 ஆயிரம் ரூபா

(கொழும்பு)

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்காவினால் தொடுக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் சிறிமாவோ பண்டாரநாயக்க செலுத்த வேண்டிய செலவுத் தொகை 9 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேமதாசா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து சிறிமாவால் தொடுக்கப்பட்ட வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது தெரிந்ததே,

## சுதந்திரக் கட்சியிடம் மாற்றுத்திட்டம் எதுவுமில்லை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அனுரா பண்டாரநாயக்க பதவியேற்றாலும் பெரிய மாற்றம் எதுவும் வந்துவிடப் போவதில்லை என அனுராதபுரத்தில் ஜனாதிபதி பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களிடம் முன் வைக்கக் கூடிய மாற்றுத் திட்டமெதுவும் சுதந்திரக் கட்சியிடம் கிடையாது எனக் குறிப்பிட்டார்.

## லலித் தாக்குதல் விவகாரம் பொலிஸ் அசட்டை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி மீது தாக்குதல் நடாத்தியபோது உபயோகிக்கப்பட்ட காரின் சொந்தக்காரர் தனது காரை தம்பியார் தமக்குத் தெரியாமல் எடுத்து சென்றதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை லலித்தை தாக்கியவர்களில் இருவர் தெகிவல-மவுண்லவனியா உள்ளூராட்சி சபையின் ஊழியர்கள் எனவும், அவ்விருவரும் தொடர்ந்தும் அங்கு வேலை செய்து வருவதாகவும், பொலிசாரிடம் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்ட போதும் அவர்கள் கவனம் செலுத்தவில்லை எனவும் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## வடபகுதி தளபதியாக லக்கி அல்கம நியமனம்?

### பாலரட்ணராஜா ஓய்வுபெற நிர்ப்பந்தம்

இராணுவ உயர் பதவிகளுள் ஒன்றான படைத் தலைமைப் பதவியில் இருந்து மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா ஓய்வு பெறும்படி தமிழர் என்பதற்காக நிர்ப்பந்திக்கப்பட்டதாக தெரியவருகிறது அவருடைய இடத்திற்கு தற்போது வடபகுதித் தளபதியாக உள்ள மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

இதனால் காலியான வடபகுதித் தளபதி பதவிக்கு தற்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரிகேடியர் லக்கி அல்கம நியமிக்கப்படவுள்ளார்

அதே சமயம் இராணுவத்தில் தற்போது போதியளவு அனுபவம் வாய்ந்த தளபதிகள் இல்லையெனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கிழக்குமாகாணத்தில் பாரியஇராணுவநடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொப்பிகல காட்டுப் பகுதியில் இராணுவ தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொப்பிகல காட்டின் மையப்பகுதியை நோக்கி பலத்த எறிகணை வீச்சு நடாத்தப் பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப்பகுதியில் கடந்த சில நாட்களாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. வடக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரில் 4,500 பேர்வரை திடீரென மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம்

## வெல்லாவெளியில் மோதல் இரு போராளிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி நாவலடிச்சந்தி என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதலொன்று ஏற்பட்டது.

கடந்த சனியன்று காலை 5 00 மணியளவில் விடுதலைப் புலிகள் இப்பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள இருந்தனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மக்கள் பேரணியில்கலந்துகொள்ள வெகுஜன அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சனசமூக

மாவட்டக் கூட்டுறவுச்சபை

அமைப்புக்கள் இவ் வேண்டு

பேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

தகுதியுடைய ஆசிரியர்களுக்கு

## நிரந்தர இடமாற்றம் வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற தகுதி பெற்ற ஆசிரியர்களை வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்கும்படி கல்வி ராஜாங்க அமைச்சு கல்வி சேவை ஆணைக்குழுவிற்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்காலிகமாக ஏனைய இடங்களில் கடமைபுரியும் ஆசிரியர்கள் வடக்குக்-கிழக்கிற்கு வெளியே நிரந்தர இடமாற்றம் பெற வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அங்கீகாரம் வழங்கி இருந்தும் அவர்

[4 ஆம பக்கம் பார்க்க]

## மனித சங்கிலி போராட்டம்

கொழும்பிலிருந்து இரத்தினபுரிவரை மனிதச் சங்கிலி போராட்டமொன்றை சிறிலங்கா எதிர்க் கட்சிகள் கூட்டாக நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

ஒக்டோபர் மாதம் 10 ஆம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடாத்தப்படும் இம் மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் போது கொழும்பிலிருந்து இரத்தினபுரிவரை மக்கள் கை கோர்த்து நிற்பர் என தெரிவிக்கப்படுகிறது.

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்குரிய நிவாரணத்தை அரசு அரைவாசியாக வெட்டியதைக் கண்டித்து நாளை நடைபெறவிருக்கும் வெகுஜனப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றன.

அரசின் மேற்படி நிவாரண வெட்டைக் கண்டித்து நடைபெற இருக்கும் இப்பேரணியில் அனைத்து மக்களும் அணிதிரண்டு வருமாறு தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் இணைந்து மேற்படி கண்டனப் பேரணி தொடர்பாக நடாத்திய ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் வேறும்பல வெகுஜன அமைப்புக்களும் தனித் தனியே அறிக்கைகள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை ஆகியவை உட்பட மேலும் பல அமைப்புக்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளன.

## யாழ். தாக்குதல் திட்டத்தை 'ராவய' வெளியிட்டது துரோகம்

### சண்டே ஒப்சேபர் கண்டனம்

[கொழும்பு]

வட பகுதியில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மேற்கொள்ளவிருந்த இராணுவ நடவடிக்கை தொடர்பான திட்டத்தை 'ராவய' செய்தித்தாள் அம்பலப்படுத்தியதை அடுத்து அத்திட்டத்தைச் செயற்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இச் செயலானது கொப்பேகடுவவுக்கும், விஜய விமலரெட்ணாவுக்கும் இழைக்கப்பட்ட துரோகமாகும் என்று சண்டே ஒப்சேபரில் பத்தி எழுத்தாளர் திலகசிறி எழுதியுள்ளார்.

வடக்கில் யுத்தத்தை வழி நடத்திவந்த அனுபவம் மிக்க உயர் இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்துக் கொப்பேகடுவவின் திட்டம் முற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வாகன உதிரிப்பாகத் திருட்டு 16 விமானப்படையினர் தொடர்பு

### வழக்குத் தொடர பொலிஸார் முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வாகன இன்ஜின்கள், உதிரிப் பாகங்கள், மற்றும் பெறுமதி மிக்க பொருள்கள் திருட்டுப் போன சம்பவம் தொடர்பாக விமானப் படையைச் சேர்ந்த பதினைந்து பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான அனுமதியைச் சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து பொலிசார் கோரியுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது இவ்வாறு திருடப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் 25 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது

1990 ஜூன் மாதத்தில் இத் திருட்டு இடம் பெற்றதாகவும், அச்சமயம் விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்குமிடையே மோதல்கள் இடம் பெற்றதையடுத்து பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்றமையாலும் மட்டக்களப்பு விமானப்படைத் தளத்திற்குச் சமீபமாக இருந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் பறித்த படகால் படையினர் மத்தியில் அச்சம்

(கொழும்பு)

இராணுவக் கடற்படைக் கூட்டுப் பாதுகாப்பின் கீழ் மண்டைதீவு கடற்படை இறங்கு துறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீருந்து விசைப் படகு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டமை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இப் படகை உபயோகித்து விடுதலைப் புலிகள் தம்மீது எங்கு எப்பொழுது தாக்குதல் நடத்துவார்களோ என்ற அச்சம் படையினர் மத்தியில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடற்படையினர் பாவிக்கும் டோரா, டிங்கி பிரங்கிப் படகுகள் என்பவற்றின் அமைப்பிலிருந்தும் செயற்பாட்டிலிருந்தும் இந்த நீருந்து விசைப் படகுகள் முற்றிலும் வேறுபட்டதாகும்

டோரா, டிங்கி படகுகளின் இயக்கம் அவற்றின் காற்றாடிகளின் இயக்கத்திலேயே தங்கியுள்ளது. அத்துடன் அவை பெரும்பாலும் பெற்றோலினாலேயே இயங்குபவையாகும் ஆனால் புலிகளால் கைப்பற்றப்பட்ட படகு டீசலினால் இயங்குவதாகும் என்பதுடன் அழுக்க விசையினால் ஓடுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நீருந்து விசைப்படகை மற்றைய படகுகள் போல சுலபமாக இயக்க முடியாது எனவும் அதற்கென விசேடபயிற்சி பெற்றாலன்றி திறமையான மாலுமி ஒருவரால் கூட இயக்க முடியாது எனவும் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் இந்தப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

வடபகுதிக்கு மண்ணெய் அனுமதித்த

## இரு ராணுவ அதிகாரிகள் மீது நீதமன்ற விசாரணை

வட பகுதிக்கு சட்டவிரோதமாய் மண்ணெண்ணெய் கொண்டுசெல்ல அனுமதிவழங்கியமைக்காக இரண்டு பிரிகேடியர்கள் உட்பட சில இராணுவத்தினர் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த பிரிகேடியர்கள் இருவரும், படையினரும் எண்ணெய் விநியோகஸ்தர் ஒருவருடன் சேர்ந்து செயற்பட்டு வந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது.

## காரைதீவில் 16 தமிழரை காணவில்லை கொல்லப்பட்டிருக்கலாமென அச்சம்

(காரைதீவு)

மட்டக்களப்பு மாவட்டம் காரைதீவு அகதிமுகாமிலிருந்து தொழில் மற்றும் பல்வேறு அலுவல்களின் நிமித்தம் வெவ்வேறு இடங்களுக்குச் சென்ற பதினாறு தமிழர்களைக் காணவில்லை என தெரியவருகின்றது இவர்கள் முஸ்லிம்களால் கொலலப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

அம்பாறை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இவர்கள் காரைதீவு அகதி முகாமில் தங்கியிருந்தனர்.

**வனம் வளர்த்தால்**
**வானம் நீர் வார்க்கும்**

## வரி விளம்பரம்

you watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி-4970)

**புதிய மீரா நாவல்**

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்து மகிழும் நாவல்கள். நீங்களும் படித்துப் பாருங்கள். இதுவரை வெளிவந்த இருபத்தியொரு ''மீரா'' நாவல்களில் எட்டு நாவல்கள் மட்டுமே விற்பனைக்குண்டு. பூபாலசிங்கம், மக்மிலன், மண்டேலா புத்தகசாலைகள் யாழ்ப்பாணம்.
(3123)

**எழுதுனர் பரீட்சை**

எழுதுனர் போட்டிப் பரீட்சைத் தகுதித்தேர்வுக்கான பொது விவேகப்பயிற்சி வெளிவந்துள்ளது. க. குணராசா எம். ஏ. எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
(3143)

# போராட்டத்தில் முழுமையாக இணைய மக்களுக்கு அறைகூவல் விடுகிறோம்

## - மறவன் -

பாஞ்சாலங் குறிச்சியை அந்நியர்கள் முற்றுகையிட்ட போது கட்டப்பொம்மன் நாட்டு மக்கள் அனைவரையும் போர்க்களம் செல்லுமாறு அறைகூவல் விடுத்தான். அதேபோல எதிரிப் படைகள் நெருங்கித்தாக்க முனையும் இக்கால கட்டத்தில் போராட்டத்தில் முழுமையாக இணைந்து கொள்ளுமாறு மக்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம். இவ்வாறு நேற்று முன்தினம் மாலை எட்டு மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்ற வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாட்டுக்கூத்து அரங்கேற்றத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு. மறவன் குறிப்பிட்டார்.

கடற்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளரான திரு. மறவன் மேலும் கூறுகையில் தமிழ்மக்களிடையே பாரம்பாரியமாக நிலவிவரும் நாட்டுக் கூத்து என்னும் கலைவடிவில் வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆடப்பட்டு வருவது தெரிந்ததே. நானும் ஒரு காலத்தில் அண்ணாவியாரிடம் பயின்று இக்கூத்தில் பங்கேற்று நடித்தவன் தான் என்றும் தெரிவித்தார்.

பாஷையூர்ப் புலவர் மதுரகவி அமரர் மிக்கேல்சிங்கத்தின் கவி உருவில் பாஷையூர் பிரகாஷ் நாடக மன்றம் தயாரித்து அரங்கேற்றிய வீரபாண்டிய கட்டப் பொம்மன் என்னும் நாட்டுக்கூத்தை பல்லாயிரக்கணக்கானோர் கண்டுகளித்தனர் என்பதும் மூன்று மணி நேரங்களுக்கும் மேல் நீடித்த இந்த நாட்டுக்கூத்தை நள்ளிரவாகும் வேளைவரை கண் துஞ்சாதும், எந்தச் சலசலப்பும் இன்றியும் ரசித்திருந்தனர்என்பதும் குறிப்பிடதத க்கதாகும்.

## வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் 22 சேவைக்கால ஆசிரியர் நிரந்தர நியமனம் பெற்றனர்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கல்விக்கோட்டப்பகுதியில்உள்ள 22சேவைக்காலப் பயிற்சி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை வாரத்தில் மூன்று நாட்கள் சேவைக்காலப்பயிற்சி நடவடிக்கைகளிலும் இரண்டு நாட்கள் பாடசாலைகள் கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்த இச் சேவைக் காலப் பயிற்சி ஆசிரியர்கள் இனிமேல் 5நாட்களும்சேவைக் காலப் பயிற்சி நட்வடிக்கைகளிலேயே ஈடுபடுவர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே யாழ். பிரதேசகல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தால் வழங்கப்பட்டது. (25)

## மழை வேண்டி கொடும்பாவி

நாயன்மார்கட்டில் மழை வேண்டி கொடும்பாவி ஊர்வலம் நடத்தப்பட்டது. மூன்று நாட்களாக நாயன்மார்கட்டிலும் அதன் அயற்கிராமங்களிலும் கொடும்பாவியைக்கட்டி ஊர்வலமாகக் கொண்டு சென்றனர். பின்னர் செம்மணிமயானத்தில் இக்கொடும்பாவியின் சிதைக்கு எரியூட்டப்பட்டது.

## விளை. போட்டிகள்

[பருத்தித்துறை]

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக்கழகத்தின் இவ்வாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி (7 பேர் கொண்டது) கடந்த 2 ஆம் திகதி பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 20விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. 16 ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறும்.

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி (11பேர் கொண்டது) இப்போட்டிகள் 23- 09- 92-ல் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக இருக்கின்றன. இதில் 14 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. 30-ம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறும்

துடுப்பாட்டம் (மென்பந்து) 11பேர் கொண்டது. இப்போட்டிகள் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் 2-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளில் பத்து விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. (25)

அரசாங்க அறிவித்தல்

**சுகாதார திணைக்களம்**

**யாழ்ப்பாணம்**

**விலைக்கூறு கோருதல்**

கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான விலைக்கூறுகள் 16-09-92ஆம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரினால் கோரப்படுகின்றன. வழங்கக்கூடிய பொருட்களுக்கு மட்டும் விலைக்கூறுகளைச் சமர்ப்பிக்கவும்.

1. மண்எண்ணெய்அடுப்பு (எட்டுத்திரி—168 சீனா)—36
2. சோஸ்பான் 16X9 அலுமினியம் (Saucepan) — 36
3. சோஸ்பான் 12X11 அலுமினியம் (Saucepan) — 36
4. வாளி 10இஞ்சி (ஜீஐ) — — 100
5. வாளி 12இஞ்சி (ஜீஐ) — — 100
6. கேற்றில் அலுமினியம் 4 பைந்த் — — 36
7 கேற்றில் அலுமினியம் 6 பைந்த் — — 36
8 பொய்லர் அலுமினியம் 12X6 Boiler Aluminium) 24
9. பொய்லர் அலுமினியம் 10X5 Boiler Aluminium) 24
10. ஆமைப்பூட்டு 2½ இஞ்சி பித்தளை குளோப்— 48
11 ஆமைப்பூட்டு 2 இஞ்சி பித்தளை குளோப் — 48
12 மண்வெட்டி 10X8 உள்ளூர் தயாரிப்பு — 10
13. அரிக்கன் லாம்பு — 50

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கூறுதாரர் 01-10-92ஆம் திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பொருட்களை வழங்க வேண்டும்.

வைத்தியகலாநிதி
பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.

சு. சே. பி. ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி.
யாழ்ப்பாணம்,
03-09-92. (சி/5000)

ஜே. ஓ. சி. குண்டுவெடிப்பு சந்தேக நபர்

## வைத்திய சோதனை செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்பு, ரஞ்சன் விஜயரத்தின குண்டு வெடிப்பு ஆகிய இருவழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டுள்ள கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த ரொபின் என அழைக்கப்படும் தில்லையம்பலம் தயாபரனை சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.

## என். எம். இன் யோசனை காலம் கடந்துவிடவில்லை

(பண்டாரவளை)

''இந்நாட்டில்நிலவும் இனப்பிரச்சினைக்கு டாக்டர் என். எம். பெரேராவும் எமது கட்சியும் முன்வைத்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று இந்தளவு தீ மூண்டிருக்காது''

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான திருமதி விவியன் குணவர்தன தெரிவித்தார். என். எம். பெரேராவின் 13 வதுசிரார்த்ததினவைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் தொடர்ந்து குறிப்பிடும்போது

பிரதேச சுயாட்சி திட்டம் இருமொழி உபயோகம் சம உரிமை போன்றவற்றை எமது கட்சி முன் வைத்தபோதெல்லாம் அவை ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டன அதனால் தான் இன்று இத்தகைய பயங்கர சூழ்நிலை நிலவுகிறது.

இன்றைக்கும் …

… எம். முன்வைத்த யோசனைகள் அமுலாக்கம் செய்யப்படுமானால் இன்று தீவெங்கும் மூண்டிருக்கும்நெருப்பு அணைந்து விடும்

சுதந்திரம் என்பது ஒரு பிரிவினருக்கு மட்டும் வழங்கப்பட்டிருப்பதல்ல அது அனைத்து பிரஜைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதம் அதனை எல்லோரும் சம உரிமையுடன் அனுபவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் பெரேரா.

சுதந்திரத்தின் நற்பெருமைகளைப் பற்றி இன்று வானளாவப் பேசுகின்றவர்களின் பரம்பரையினர் அன்றைய காலகட்டத்தில் வெள்ளையர்களின் பாதம் தாங்கிகளாக இருந்த வரலாறும் இருக்கத்தான் செய்கிறது என்றும் அவர் தன துரையில் குறிப் …

# ஆட்சேப மனுத் தாக்கல் செய்தது தேர்தல்முறையை வெளிப்படுத்தவே

## -- சிறிமா பண்டாரநாயக்கா

(கொழும்பு)

அண்மையில் தேர்தல் ஆட்சேபனை வழக்கின் முடிவுகளுக்கு நான் மதிப்பளிக்கும் அதேவேளை சுதந்திரமான நீதியானதுமான ஒரு தேர்தலின் முக்கியத்துவத்தினை அதன் அருமையினை மக்களுக்கு உணர்த்து முகமாக எமது பிரசார இயக்கத்துக்கு முன்னரை விட மேலும் உறுதியாக என்னை அர்ப்பணிக்கிறேன்.

இவ்வாறு எதிர்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா கடந்த வியாழன …

… ன்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது சட்டத்துறையில் கிடைக்கும் வெற்றி தோல்விகளை அடிப்படையாக வைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதன் பணிகளை நோக்கப்போவதில்லை மக்களிற்கு செய்ய வேண்டிய கடமையின்முக்கியத்துவத்தை உணர்ந்தே கட்சி அதன் பணிகளை நோக்கும்.

மேலும் நான் தாக்கல்செய்த தேர்தல் ஆட்சேபனை வழக்கு சுமார் மூன்றரை வருடகாலம் …

… விசாரிக்கப்பட்டு இப்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

1988 ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்ட முறையை வெளிக் காட்டுவதற்காகவே நான் இந்த ஆட்சேப மனுவை தாக்கல் செய்திருந்தேன்.

எனினும் அரசபயங்கரவாதம்உட்படசகலவகைஅச்சுறுத்தல்களையும் மீறி எனது வழக்கிற்கு சாட்சியளித்த அனைத்து சாட்சிகள் சட்டத்தரணிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என திருமதி பண்டார …

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 08

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில், பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**காந்தன்** (வேலாயுதம்பிள்ளை உதயகுமார் - கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)

**ஜேம்ஸ்** (குணரட்ணம் சிவமனோகரன் - விநாயகமுதலியார் தெரு, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை காவலரண் பகுதியில் சிறிலங்காப் படையினரின் எறிகணை தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**றாஜன்** (ஜேம்ஸ் உதயபிரசாத் - 31, மவுண்கார்மேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)

**நந்தன்** (கந்தசாமி நந்தகுமார் - இல 116, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

**ரமேஷ்** (தங்கவேலாயுதம் ரமேஸ்குமார் - திருநெல் …

தலைவி சிறிமா பண்டார நாயக்கா கடந்த வியாழன

தேர்தல் ஆட்சேபனை வழக்கு சுமார் மூன்றரை வருடகாலம்

நன்றியை தெரிவித்துக்கொள் கிறேன் என திருமதி பண்டார நாயக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது

நிலவுகிறது.

இன்றைக்கும் காலம்கடந்து விடவில்லை. டாக்டர் என்.

தான் செய்கிறது என்றும் அவர் தனதுரையில் குறிப் பிட்டார்.

## போலிக்காயங்களைக்காட்டி எதிர்க்கட்சி வாக்கு வேட்டை

**- பிரேமதாசா**

(கொழும்பு)

பிச்சைக்காரனின் புண்க ளைப் போல எதிர்க்கட்சிகளும் காயங்களைக் காட்டி வாக்கு வேட்டையாட முற்பட்டுள் ளன என்று சிறிலங்கா ஜனாதி பதி பிரேமதாசா கூறியுள் ளார்.

பண்டுவஸ்நுவர பகுதியில் கெலம்பகம என்னும் கிராமத் தை கிராம எழுச்சித் திட்டத் தின் கீழ் திறந்து வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகை யில் புண் இருந்தால் தான் அதனைக் காட்டிப் பிச்சை எடுக்க முடியும் என்பதற்காக புண் குணமடைவதை பிச்சை க்காரர் விரும்புவதில்லை. இன்னும் சிலரோ புண் என்று எதுவுமில்லாத போதும் சிவப் புமையையும்சீ னியையும்கரை த்து ஊற்றி ஈக்கள் மொய்ப்ப தற்கு இடமளிக்கும் வகையில் கட்டுக்களை ஏற்படுத்திப் பிச்சை கேட்பர் இத்தகையவ ர்களைப் போலத்தான் எதிர்க் கட்சிகளும் நடந்து வருகின் றன என்று குறிப்பிட்டார்.

## யாழ். லீக். உதைபந்தாட்டம் இறுதிப் போட்டிகள் 12, 13ல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் கினால் விளையாட்டுக் கழகங் களிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டங் கள் இம்மாதம் 12 ஆம் 13ஆம் திகதிகளில்நடைபெறவுள்ளன.

மேற்படி லீக் நடாத்திய நொக்கவுட் போட்டியின் சாம் பியன் மோதல் இம் மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

குருநகர் பாடுமீன் கழகத் துக்கும் பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகத்துக்கும் மிடையில் நடைபெறவிருக்கும் இவ் இறுதியாட்டத்துக்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன் னாள் அதிபர் வண. பிரான் ஸிஸ் ஜோசப் பிரதம அதிதி யாகக் கலந்து கொள்கிறார்.

13 வயதுக்குட்பட்டோருக் கும் 40 வயதுக்கு மேற்பட் டோருக்குமிடையில் நடாத்த ப்பட்டு வந்த 7வீரர்கள் பங்கு பற்றும் நொக்கவுட் போட்டி களின் இறுதியாட்டங்கள் இம் மாதம் 13-ம் திகதி அரியாலை ச.ச நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. 13வயதுக் குட்பட்டோர் போட்டியில் குருநகர், பாடும்மீன் கழகமும் நாவாந்துறை சென்மேரிஸ் கழகமும் மோதும் 40 வயதிற்கு மேற்பட்டோர் போட்டியில் சென்றோக்ஸ்கழ கமும் அரியாலை ஐக்கிய கழக மும் மோதும்.

இப்போட்டிக்கு யாழ். உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க த்தின் தலைவர் திரு. எம்.டி. தம்பிராசா பிரதம அதிதியா கக் கலந்து கொள்கின்றார்.

[42[


எமது தேசத்தை இறுதிவரை போராடி காத்துநின்ற
சகோதர மாவீரர்களுக்கு


**எமது வீர அஞ்சலிகள்**

8 - ம் ஆண்டுநினைவஞ்சலி



கப்டன் றஞ்சன்லாலா
( கனகநாயகம் ஞானேந்திரமோகன் )
வீரப்பிறப்பு ;
02 - 09 - 1960
தொண்டமனாற்றில் வீரச்சாவு :
13 - 07 - 1984

1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மேஜர் கூண்டேஸ்
( கனகநாயகம் குணேந்திரமோகன் )
வீரப்பிறப்பு ;
03 - 01 - 1963
மணலாற்றில் வீரச்சாவு ;
09 - 09 - 1991

தங்கத் தமிழுக்காக
பொங்கி எழுந்தவர்கள் - கள
மேடைதனில்
கதைபடைத்து போனவர்கள்

இவர்களுடன் வீரச்சாவு அடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள் நாளை 09 - 09 - 1992 எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலேந்திரன் வீதி, (பழைய உடையார் ஒழுங்கை)
பருத்தித்துறை. (சி-5019)

பெற்றோர், சகோதரர்கள்,
சகோதரி, மைத்துனிகள்



வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)

**நந்தன்** (கந்தசாமி நந்தகுமார் - இல 116, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

**ரமேஸ்** (தங்கவேலாயுதம் ரமேஸ்குமார் - திருநெல் வேலி தெற்கு, யாழ்ப்பாணம்)

1987ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

1988ஆம்ஆண்டு சாவகச்சேரி நுணாவிலில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன்

1989ஆம் ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப்படை யினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழ்ப் பொதுமக்கள்.

1990 ஆம் ஆண்டு வசாவிளானில், சிறிலங்கா இரா ணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய் திய -

**ஜெயா** (ம ரவி - வன்னேரிக்குளம், கிளிநொச்சி)

யாழ் நகர்ப்பகுதியில், சிறிலங்காப்படையினர் மேற் கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழ்ப் பொதுமக்கள்.

சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொலை செய் யப்பட்ட, மட்டு - குமாரவேலியார் கிராமம், ஏறாவூர்ப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழ்ப் பொது மக்கள், மற்றும்- நொச்சி முனை - அனுமார் வீதி வாசியான தமிழர்.

1991 ஆம் ஆண்டு மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பரிமளா** (சந்திரபவானி (ஈசா) கந்தசாமி -முத்துமாரி அம்மன் கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்.)

**ராணி** (சந்திரயோகினி செல்வநாயகம் - வட்டக்கச்சி கிளிநொச்சி)

**லெப். மதுரா** (வடிவாம்பாள் பரமு-மீசாலைவடக்கு சாவகச்சேரி, யாழ்)

**கல்பனா** (அருள்நிதி கனகரட்ணம் - அல்வாய்தெற்கு யாழ்ப்பாணம்)

**பிலகரி** (இரத்தினேஸ்வரி சரவணமுத்து - உருத்திர புரம், கிளிநொச்சி)

**2-ம் லெப். சலுஜா** (ரதீஸ்வரி கணபதிப்பிள்ளை அண்ணாசிலையடி, கரணவாய் தெற்கு,கரவெட்டி யாழ்.)

**கப்டன் அக்கினோ** (கலைவாணி இராசரத்தினம் - கைதடி, நுணாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்)

**லெப். குணசீலி** (சிவறாஜி தியாகராஜா - மாரி யம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5018)

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி ...
யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

களங்கமே இல்லாத நல்ல மனிதர்கள் இருவர். ஒருவர் இறந்து விட்டவர். மற்றவர் இன்னும் பிறக்காதவர்.

— சீனப் பழமொழி

களங்கமற்ற தூய்மையும், கயமையின் அவதூறுக்கு விலக்கு இல்லை,

— பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## நீதிக்குப் பாதுகாப்பு தேவை

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனுவை விசாரித்த நீதியரசர்களில் ஒருவரான எஸ், ரி. குணவர்த்தனாவின் வீட்டின் மீது கற்கள் வீசப்பட்டதினால் அவரது வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கின.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு விசாரணை மேற்கொண்ட ஐந்து நீதியரசர்களினாலும் ஏகமனதாக வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும் வழக்கிற்கான செலவுத் தொகையை வழக்குத் தாக்கல் செய்த மனுதாரரான சிறிமாவோ பண்டார நாயக்கா செலுத்த வேண்டும் என்பது ஏகமனதான தீர்ப்பாக இருக்கவில்லை. நீதியரசர்களில் ஒருவரான குணவர்த்தனா செலவுத் தொகையை சிறிமாவோபண்டாரநாயக்க செலுத்த வேண்டியதில்லை எனத் தனது முடிவைக் கூறியிருந்தார். இந்நீதியரசரின் வீடே தற்பொழுது கல் வீச்சிற்கு இலக்காகியுள்ளது.

நீதியரசர் எஸ். ரி. குணவர்த்தனாவின் வீட்டிற்கு யார் கல்லெறிந்தார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதாவது ஐக்கிய தேசியக் கட்சி எறிந்ததா? அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எறிந்ததா? அல்லது வேறு யாராவது எறிந்தார்களா? என்பதை விட நீதியரசரின் வீட்டிற்குக் கல்லெறியக் கூடிய நிலை காணப்பட்டது, அல்லது அனுமதிக்கப்பட்டது என்பதே பிரச்சினைக்குரியதாகும்.

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு தீர்ப்பு வெளிவர இருந்த நிலையிலும், பின்னரும் நீதியரசர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாக அரசாங்கத் தரப்புச் செய்திகள் தெரிவித்திருந்தன. நீதியரசர்களின் வீடுகள் பொலிஸாரின் பலமான பாதுகாப்பிற்கு உள்ளாகியும் இருந்தன.

இந்நிலையில்தான் நீதியரசரின்வீடுகல்லெறிக்கு இலக்காகியது. ஆனால்கல்லெறி நீதிபதிவீட்டிற்கு எனவீசப்படவில்லை எனபொலிஸ் தரப்புமறுத்துள்ளது. நீதிபதி வீட்டில் பாதுகாப்புக் கடமையில் இருந்தபொலிஸ் அதிகாரிகளின்அறிக்கைகளின்படி வாசஸ்தலத்திலுள்ள கொட்டங்காய் மரத்திற்கு வீசப்பட்ட கல் ஒன்று வீட்டின் ஜன்னல் ...

# அமெரிக்காவிற்குச் சவாலாக அணிசாரா அமைப்பு உருவாகுமா?

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ என்னும் ரத்து அதிகாரம் பெற்ற நாடுகள் அனுபவிக்கும் ரத்து உரிமை ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று அணி சாரா நாடுகளின் ஜகார்த்தா உச்சிமாநாட்டில் குரல் எழுட்பப்பட்டுள்ளது.

இராணுவபொருளாதாரபலத்துடன் தட்டிக்கேட்டுக் கட்டுப்படுத்த முடியாதவாறு நடைபெறும் உலக அமைப்பு பாரபட்சமானது என்பதை மூன்றாம் உலக நாடுகள் உணரத் தலைப்பட்டுள்ளன என்பதை இந்தக் குரல் எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

அணிசாரா நாடுகள் என்னும் அமைப்பு இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்ற பின்னர் அமெரிக்க சோவியத் வல்லரசுகளுக்கு இடையே பனிப்போர் நடைபெற்ற காலத்தில் கருக்கட்டிய ஒரு அமைப்பாகும். இப் பனிப்போர் நீடித்த காலப்பகுதியில் அமெரிக்க அணியான நேட்டோ நாடுகளுடனோ சோவியத் அணியான வார்சோ நாடுகளுடனோ நேரடியாகச் சாராமல் நடுநிலை நின்று மூன்றாம் உலக நாடுகள் தமக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதிலும் பிராந்தியப் பதற்றங்களை தவிர்ப்பதிலும் அணிசாரா நாடுகள் அமைப்பு பெரும் பங்காற்றியது குறிப்பிடத்தக்கது.

எனினும் பனிப்போர் முடிவுக்கு வந்து சோவியத் சிதறுண்ட பின்னர் அணிசாரா நாடுகள் என்னும் அமைப்பே அவசியம் தானா என்றகேள்வி பிறந்த சூழ்நிலையில் இந்தோனேசியத்தலைநகர் ஜகார்த்தாவில் அணிசாரா நாடுகள் அமைப்பின் மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது.

சுமார் நூற்றிஆறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர் 1955 இல் பாண்டுங் மாநாட்டின் மூலம், எகிப்திய அதிபர் நாசர். யூகோஸ்லாவியா அதிபர் டிட்டோ, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு போன்றோரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அணிசாரா நாடுகள் அமைப்பு புதிய பாதையில் தனது பயணத்தை மேற்கொள்ள சித்தமாயுள்ளது என்பதை இம் மாநாடு எடுத்துக்காட்டியுள்ளதென்றால் மிகையானதல்ல.

உலகின் ஒரேயொரு வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையில் இம் மாநாடு மிகுந்த முக்கியத்துவம்உடையதாகும். பிராந்தியப் பிரச்சினைகளில் பக்கச்சார்பாக அமெரிக்கா நடந்துகொண்டதாகவும்மனித உரிமை மீறல்கள் என்றபோர்வையில் உள்நாட்டு விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்த முற்படுவதாகவும், கடனுதவி மற்றும் பொருளாதாரத்தைக் காட்டி மூன்றாம் உலக நாடுகளைப் பணியவைக்க முயல்வதாகவும் அமெரிக்காவை நோக்கி கண்டனக் கணைகள் எழுப்பப்பட்டுவரும் இன்றைய காலகட்டத்தில் ஒருமித்த குரலில் கருத்துக் கூறுவதற்கு இம் மாநாடு தகுந்த களமாகப் பயன்பட்டது என்றேகூறலாம் இந்தமாநாட்டில் கலந்துகொண்ட பல்வேறு தலைவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அமெரிக்காவின் ஏகபோக எண்ணத்திற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர் என்றே கருதமுடிகிறது

"ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ என்னும் ரத்து அதிகாரம் பெற்றுள்ள அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் நடவடிக்கைகளால் ஐ. நா. அதன் கடமைகளைச் செய்வதற்கு தடையும், ஜனநாயக அடிப்படையிலான பணிகளுக்குப் பாதகமான

### இளையவன்

சூழ்நிலையும் ஏற்பட்டிருப்பதாக" சிரியாவின் உப அதிபரான அப்துல் ஹலீம் அலிகத்தாம் குற்றம்சாட்டினார்.

"வீட்டோ அதிகாரம் ரத்து செய்யப்பட வேண்டும் பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கருத்துக்களை ஈரானிய அதிபர் அலி அக்பர் ரப்சன் ஜானி வலியுறுத்திப் பேசினார்.

ஆறு நாள் உச்சிமாநாட்டைப் பொறுப்பேற்று நடாத்திய இந்தோனேசியாவும், மற்றும் ஸிம்பாப்பே, மலேசியா என்பனவும் வீட்டோ அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவு தெரிவித்தன.

"அமெரிக்காவின் ஆதிக்க மமதைக்கு அணிசாரா இயக்கம் கண்டனம் தெரிவிக்க வேண்டும்" என்பது மலேசியாவின் நிலையாக இருந்தது.

அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஏனைய நாடுகளில் ஒருவகையான ஆக்கிரமிப்பு அல்லது தலையீடு என்று வர்ணித்த கியூபா, சர்வதேச நியதிக்கு முரணாக அமெரிக்கா நடந்து வருவதாக கருத்து வெளியிட்டது.

பாதுகாப்பு, சமாதானம், பொருளாதாரசுதந்திரம் என்பவற்றின் அடிப்படையில் உலகின் புதிய ஒழுங்கு வகுக்கப்பட வேண்டும் என்றும், பிராந்திய ரீதியாக அல்லாமல் பூகோளரீதியாக அணு ஆயுதம் போன்ற மனித குல அழிவுக்கு வித்திடும் கருவிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் இந்த வேண்டுகோள் விடுத்தார்.

அதாவது சுருக்கமாகச் சொன்னால் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பில் சீர்திருத்தங்கள் நடைபெற வேண்டுமென்பதே அணிசாரா இயக்கத்தை சேர்ந்த சுமார் 106நாடுகள் நடத்திய பத்தாவது மாநாட்டின் சாராம்சமான கோரிக்கையாகும்.

ஜகார்த்தாவில் செய்தியாளர்களிடையே பேசிய ஐ நா. செயலாளர்பூட்டர்ஸ்பூட்டர்ஸ் காலியும் இதனை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டவராகவே காணப்பட்டார்.

ஐ.நா. அமைப்பின் சட்டங்களை மாற்றுவதற்கு முன்பாக ஐ நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அனுமதியை பெற வேண்டுமென அவர் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், ஐ.நா வில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் பாராமுகமாக நடந்து வருவதாக கவலை தெரிவித்ததோடு ஆம் அல்லது இல்லையென்று வாக்களிப்பதுடன் மட்டும் நின்று விடாது தேவைகளுக்காகவும் குரலெழுப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செலவுகளில் முப்பது சதவிகிதத்தை செலுத்துவதாக ஏற்றுக் கொண்ட அமெரிக்கா, இதுவரை அதனைச் செலுத்தவில்லை என்பதும், ஐ நா.விற்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய தொகை நூறு கோடி டாலராக உயர்ந்துள்ளது என்பதும், ஐ. நா. சபையின் நிர்வாகச் செலவுகளுக்கே பொருளாதார முடை ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

எனவேதான் அமெரிக்கா நிலைநாட்ட முயலும் உலகின் புதிய ஒழுங்கு எத்தகையதாக இருக்கும் என்பதும், அமெரிக்காவின் தலைமைத்துவத்தை அல்லது முதன்மையை உலகரங்கம் குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகள் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடும் என்பதும் கேள்விக்கு உரியவையாகின்றன.

எது எப்படியாயினும் வடிவங்கள் மாறினவே அன்றி கெடுபிடிப்போர் தணிந்துவிடவில்லை என்பதை மட்டும் உணர முடிகிறது.

# இந்தியாவிற்கு இராணுவ உதவிகள்; தொடர்ந்து வழங்க ரஷ்யா உறுதி

### – இந்திய பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(மொஸ்கோ)

இந்தியாவிற்கு தேவையான இராணுவ உதவிகளை ரஷ்யா தொடர்ந்து வழங்கும் என உறுதியளித்திருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சரின் அழைப்பையேற்று ரஷ்யா சென்றுள்ள சரத்பவார் மொஸ்கோவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத்யூனியன் இந்தியாவிற்கு வழங்கி வந்த உதவிகளை ரஷ்யா மேற்கொண்டு செய்யும் என்றும்,

ஜனவரி மாதம் இந்தியா வரவிருக்கும் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ்யெல்சின இந்திய - ரஷ்ய நட்புறவு உடன்படிக்கையில் கையெழுத்திடுவார் என்றும்,

இதற்கு முன்னோடியாகவே தாம் ரஷ்யா வந்துள்ளதாகவும் சரத்பவார் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த தொடர்பை அடுத்தே இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் ரஷ்யா வந்துள்ளதாக ரஷ்யப் பாதுகாப்புத் துணை அமைச்சர் ஜெனரல் விளாடிமீர் துப்பரோவ் தெரிவித்தார்.

### பூட்டான் எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

# 400 பொதுமக்கள் இராணுவத்தால் கொலை

(காத்மண்டு)

பூட்டானில் 400 பொதுமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டதாக அந்நாட்டின் ஒரேயொரு எதிர்க்கட்சியான பூட்டான் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் பெருந்தொகையானோர் கொலையுண்டது தொடர்பான இந்தக் குற்றச்சாட்டு நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் இருந்தே முதலில் தெரிவிக்கப்பட்டது. 327 பேர்

இதன் பின்னர் ஐ. நா. மனித உரிமைகளுக்கான நிறுவனம் 185 பேரின் பெயர்ப் பட்டியல் ஒன்றை வெளியிட்டது. அரசாங்க எதிர்ப்பாளர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது.

பூட்டானில் நீண்டகாலமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் பாரம்பரிய மன்னர் ஆட்சி முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமான போராட்டங்களை பூட்டான்

வாசஸ்தலத்திலுள்ள கொட்டங்காய் மரத்திற்கு வீசப்பட்ட கல் ஒன்று வீட்டின் ஜன்னல் கண்ணாடி மீது வீழ்ந்து சேதப்படுத்தியது எனக்களனிபொலிஸ் சிரேஷ்ட சுப்பிரிண்டன் நளின் தெல்கொட தெரிவித்துள்ளார்.

இவ்வாறானால், இதில் முக்கியமான விவகாரமாகவும், கேள்விக்குரியதாகவும் இருப்பது நீதியரசருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு எத்தகையது என்பதேயாகும். அதாவது, நீதியரசருக்கு வழங்கப்பட்டவிசேடபாதுகாப்பின்போதுஒருவர்கல்லெறி தூரத்தில் நின்றுகொண்டு கற்களை நீதியரசர் வீட்டின் மீது வீசக்கூடியதாக இருந்துள்ளது. — அது வீட்டிற்காய் இருந்தாலென்ன, கொட்டங்காய் மரத்திற்காய் இருந்தாலென்ன — இந்நிலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதேகேள்வியாகும். பொதுவாக, விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளவீட்டிற்கு கல்லெறி விழுவதென்பது இலகுவானதொன்றல்ல அதற்கு விளக்கம் சொல்ல முற்படுவது வேடிக்கையானது. அதுவும் நீதித்துறைக்கே இடம் பெறுவது அபாயத்தின் உச்சகட்டத்தை உணர்த்துவதாகும்.

இந்நிலையில். ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபமனுவில் வாதியான எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குச் சார்பாக சாட்சி சொன்னவர்களுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள விடயம் மிகவும் முக்கியம் பெறுகின்றது. இவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருப்பினும் விசேட பாதுகாப்பு ஏற்பாட்டின் கீழ் உள்ள உச்ச நீதிமன்ற நீதியரசர் வீட்டிற்கே கல் வீச்சென்றால் சாட்சி சொன்வர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு எம் மாத்திரம் ?

ஆனால், நீதித்துறையின் இவ் அவலத்திற்கும், பொலிசாரினது கண்துடைப்புக்களுக்கும், புரட்டுகளுக்கும் தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் நீதித்துறையும் நேர்த்தியாகச் செயற்படாமல் அரசாங்கத்தின் இனவாதப் போக்கிற்கு ஏற்பச் செயற்பட்டதே காரணமாகும். தமிழர் படுகொலைகள் புரியப்பட்டபோது இராணுவத்தினரையும், அரசாங்கத்தையும் பாதுகாக்க நீதித்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள், வழங்கிய தீர்ப்புக்கள் இன்று வளர்ந்து அவர்களை மிரட்டும் அளவிற்கே வந்து விட்டது இதை நீதிபதிகளும் புரிந்துள்ளனர் போல் தெரிகிறது இதைக் கருத்திற் கொண்டுதான் ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபமனு மீதான தீர்ப்பின் போது நீதியரசர்கள் பாதுகாப்புக் கோரியிருந்தார்கள் போலும்.

ரஷ்யா சென்றுள்ள சரத் பவார் மொஸ்கோவில் இத படிக்கையில் கையெழுத்திடுவார் என்றும்,

விளாடிமீர் துப்பரோவ் தெரிவித்தார்.

# கட்சியிலிருந்து விலகத் தயார்; ஜி.கே. மூப்பனார் அறிவிப்பு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சியில் இருந்து தான் வெளியேறத் தயாராக இருப்பதாக இக்கட்சியின் உறுப்பினர் கறுப்பையா மூப்பனார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அறிக்கை ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்த அவர் கட்சி மேலிடம் விரும்பினால் தான் உடனேயே கட்சியை விட்டு வெளியேற ஆயத்தமாய் உள்ளதாயும் தெரிவித்தார்.

தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், மூப்பனாரும் பிளவுபட்டு வெள்ளையனே வெளியேறு தினக் கொண்டாட்டங்களில் வெவ்வேறாக நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

அத்துடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அரசாங்கத்தையும், கட்சியையும் மூப்பனார் விமர்சித்து. இந்திரா காங்கிரஸ் எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டும் என்றும் திராவிடக் கட்சிகளைத் தவிர்த்து தனித்து இயங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தது தெரிந்ததே

கறுப்பையா மூப்பனார் அ. தி. மு. க. எம். எல், ஏ. க்கள் சிலருடன் இணைந்து தமது அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்கிறார் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் ஜெயலலிதா முறைப்பாடு செய்ததாகவும் இந்தியப் பத்திரிகைகள் செய்தி தெரிவித்திருந்தது வாசகர் தெரிந்ததே.

இந்த நிலைமையில் கறுப்பையா மூப்பனார் கட்சி மேலிடம் விரும்பினால் கட்சியிலிருந்து வெளியேறத் தயார் எனத் தெரிவித்துள்ளார். காமராஜரின் வாரிசு எனக் காங்கிரஸ் தலைவர்களால் புகழப்படுபவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானிய ஊடுருவலை தடுக்க ஆதிவாசிகளுக்கு ஆயுதம்

-சதாம் ஹுசைன் அறிவிப்பு

(பாக்தாத்)

ஈரானிலிருந்து ஊடுருவல் செய்பவர்களை எதிர்த்து போராடுவதற்கு வகையேற்படுத்திக் கொடுக்கு முகமாக தென்பகுதி ஆதிவாசிகளுக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களைத் தாம் ஆயுதபாணிகளாக்கி வருவதாக சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஆளும் பாத் கட்சி அங்கத்தவர்களையும் ஆதிவாசிகளையும் பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கும் வைபவம் ஒன்றிலேயே சதாம் இதைத் தெரிவித்தார்.

மேற்கு நாடுகளின் வானப் பாதுகாப்பை பயன்படுத்திக் கொண்டு ஈரான் ஆதரவு ஊடுருவல்காரர்கள் வருகின்றனர். ஈரானிய ஆதரவுடன் ஊடுருவல் செய்பவர்களைத் தடுக்கவே ஏராளமான ஆயுதங்களை ஆதிவாசிகளுக்கு அனுப்பி வருவதாக குறிப்பிட்டார்

சிவிலியன்களை அச்சுறுத்துவதற்கும் அரசாங்க அதிகாரிகளை கொலை செய்வதற்குமாக இராணுவத்தை விட்டுச் சென்றவர்களையும் கிரிமினல் காரர்களையும் ஊடுருவல்காரர்களையும் ஈரான் அனுப்பி வருவதாக சதாம் குற்றம்சாட்டினார்.

இதே வேளை மேற்குநாட்டு விமானத் தடை ஈராக்கை பலவீனப்படுத்தும் என்ற கூற்றை முற்றாக மறுத்தார்.

## நகரசபைத் தேர்தலில் இந் காங்கிரஸ் வெற்றி

(சண்டிகார்)

பஞ்சாப்பில் நடைபெற்ற நகரசபைக் கமிட்டிகளுக்கான தேர்தல் முடிவுகளில் இந்திரா காங்கிரஸ் முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காங்கிரஸ் கட்சி 398 ஆசனங்களையும், பாரதிய ஜனதா 68 இடங்களையும் பெற்றுள்ளன. ஏனைய 767 இடங்கள் சுயேட்சைகளுக்குச் சென்றுள்ளன.

## போலந்தில் காட்டுத் தீ

ஐரோப்பாவின் பெரும் தீயெனக்கருதப்படும் போலந்து கானகத் தீ கட்டுக் கடங்காது பரவுவதாக அஞ்சப்படுகிறது.

25, 000 ஏக்கருக்கு அதிகமாகப் பரவியுள்ள தீயை அணைப்பதில் சுமார் 80, 000 தீயணைக்கும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

...விக்கப்பட்டது. 327 பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டதாக ''கையோடோ நியூஸ்'' நிறுவனமும், ''ஏ. எப். பி.'' செய்தி நிறுவனமும் செய்தி வெளியிட்டன.

...போராட்டங்களை பூட்டான் மக்கள் கட்சி நடத்தி வருகிறது

இதேவேளை இக் குற்றச்சாட்டு பொய்யானது, ஆதாரமற்றது எனப் பூட்டான் அரசு மறுத்துள்ளது.

## புளோரிடா புயல் நிவாரணம்; குவைத் ஒரு கோடி டொலர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் புளொரிடாவிலும் லூசியானா பகுதியிலும் ஹரிக்கேன் அன்ரூ என்னும் புயலினால் ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்வதற்கு குவைத் மன்னர் ஷேக்ஜாபர் அல் அஹமட் அல்சாபா ஒரு கோடி டொலரை வழங்கியுள்ளார்.

சுமார் மூவாயிரம் கோடி டொலர் சேதம் மேற்படி இரு நகரங்களிலும் புயலினால் ஏற்பட்டுள்ளது.

40 பேர் உயிரிழந்ததுடன் 2,50,000 பேர் தமது வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

குவைத்தின் பணம் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் நிவாரணப் பணிகளுக்கு என கையளிக்கப்பட்டுள்ளது.

## தாய் புகைப்பிடித்தால் குழந்தைக்கு கேடு

புகைக்கும் பழக்கமுடைய தாய்மாரால், அவர்களது குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அண்மைய ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்தாறு தாய்மாரிடையேயும் அவர்களின் நான்கு வயது தொடக்கம் பதினொரு வயது வரையிலான சிறுவர்களிடையேயும் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து இது தெரியவந்துள்ளது.

கருத்தரித்த பின்னர் நாளாந்தம் ஒரு பக்கட் சிகரட் அல்லது அதற்கும் மேலாக புகை பிடிக்கும் வழக்கமுடைய தாய்மாரின் குழந்தைகள் தீவிரமான பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரத்திற்கான ஹர்வாட் பாடசாலையும், றோசெஸ்டர் பல்கலைக்கழகமும் இந்த ஆய்விலிருந்து குழந்தைகளிடையே தீவிரமான குணவியல்புகள் வளர்வதற்கும்' கருத்தரிக்கும் காலத்தில் தாய்மார் புகைப்பிடிப்பதற்கும் தொடர்புகள் இருப்பதாகக் கூறியுள்ளது. பிறிடயாரிக்ஸ் (Prediatrics) என்னும் அமெரிக்க சஞ்சிகை மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளது.

கருத்தரிக்கும் காலத்தில் புகைப்பிடிக்கும் வழக்கமுடைய தாய்மார் பெற்றெடுக்கும் குழந்தைகள் மூளையில் அல்லது நரம்பு மண்டலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள்.

ஈழநாதம்

## பெற்றுக் கொள்ளவும்

ராமலிங்கம் ராஜகோபாலு என்பவருடைய பாஸ்போட்டும் வேறுசில ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டு முத்திரைச் சந்தை அனுமதி வழங்கும் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## ஏன் அகதிகளானோம்? சிந்தித்து செயல்படுக

- தமிழிச்சி

(மானிப்பாய்)

ஓர் கிணற்றுக்கு மறைவாக வேலிஅமைப்பதாய்இருந்தால் நாம் எத்தனை கதியால்களை உபயோகிக்கவேண்டிஉள்ளது அவ்வாறே எம் தமிழீழ மண்ணையும் நாம் பாதுகாக்க வேண்டி இருப்பின் எத்தனை போராளிகளை நாம் தமிழீழத்தின் எல்லைகளில் நிறுத்த வேண்டும் என்பதை பொதுமக்களாகிய நீங்கள் சிந்தித்து பார்க்கவேண்டும். 'அகதிகள்' 'இடம்பெயர்ந்தவர்கள்' என பெயர் எடுக்காது ஏன் அகதிகளானோம்? ஏன் இடம் பெயர்ந்தோம்? என்பதை நீங்கள் சிந்தித்து உணரவேண்டும் என நேற்று முன்தினம் நவாலி களையோடை அம்மன் கோயில் முன்றலில்நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில் ஆனைக்கோட்டை - மானிப்பாய் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தமிழிச்சி மேற்கண்டவாறு தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டு வந்துள்ளன. தந்தை செல்வா அகிம்சைவழி போராட்டங்களையும் நடத்தி வந்தார் ஆனால் இவற்றால் தமிழர்களுக்கு விடிவு ஏற்படவில்லை. இதனாலேயே எமது போராட்டம் ஆயுத வடிவில் தலைவர் பிரபாகரன் தலைமையில் இன்று நடைபெற்று வருகின்றது. நாம் என்று தமிழீழ பிரதேசத்தில் இருந்து எமது எதிரிகளான சிங்கள கூலிகளை விரட்டுகிறோமோ அன்றே எமது மக்களுக்கும் எம் மண்ணுகுக்ம் விடிவு பிறக்கும் என தெரிவித்தார். (07)

## சடலில் குதித்தவர் தப்பிவந்தார்

கடந்த சனிக்கிழமை இரவு புலோப்பளைக்கடலில்வைத்து கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சிக் கடலில் பாய்ந்து காணாமல் போயிருந்தவர் மறுநாள் ஞாயிறு பிற்பகல் கரைவந்து சேர்ந்தாரென்று அறிவிக்கப்படுகிறது

மேற்படி சம்பவத்தில் தருநகரைச் சேர்ந்த ம சின்னத்தம்பி (வயது 27) காணாமல் போயிருந்தது அறிந்ததே

படகில் பொருள்களை அக்கரையில் இருந்து கொண்டு வரும் தொழிலாளியான அவர் கடலில் திசை தெரியாமல் அலைந்து பல மணி நேரம் கடலிலேயே கிடந்து மறுநாள் பகலில் நீந்திக்கரைவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது (21)

## புதிய ஆயர் நியமனம்

(ஊருநகர்)

யாழ். மறைவட்ட புதிய ஆயராக அதிவண - தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நியமனம் பெற்றுள்ளார்.

இதனை இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மறைவட்டத்தில் உள்ள தேவாலயங்களில் மணி அடித்து சம்பிரதாய பூர்வமாக மக்களுக்கு அறிவிக்கப்படுமென்றும் யாழ். ஆயர் இல்ல வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

இதேவேளை வத்திக்கானில் உத்தியோக பூர்வ பத்திரிகையிலும் இந்தச் செய்தி வெளியிடப்படும்.

புதிதாக ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள கலாநிதி வண - ஆர். யோசெப் அடிகள் மன்னார் மறைவட்ட ஆயராக நியமனம் பெறுவதையும் மன்னார் மறைவட்டத் தேவாலயங்களில் மணி அடித்து சம்பிரதாய பூர்வமாக மக்களுக்கு அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதிவண-தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மன்னார் மறைவட்ட ஆயராக இதுவரை பணிபுரிந்தமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## சுதந்திரக்கட்சி தேர்தலுக்கு தயாராக இரண்டு வருடங்கள் பிடிக்கும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது கிளைகளை ஒழுங்காக புனரமைத்து ஒரு தேர்தலுக்கு தயாராவதற்கு குறைந்தது இன்னும் இரண்டு வருடங்களாவது தேவைப்படும் என்று கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போது முழுநேரமாக உழைக்கும் தொண்டர்கள் என்று எவரும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

சுயாதீனமான அரசியல் ஆய்வாளரான டாக்டர் ஜயதேவ உயன்கொட போன்றோர் கூறுகையில் கட்சியின் இத்தகைய செயலற்ற தன்மையினால் தான் ஹெலஉறுமய போன்ற சக்திகள் முளைத்திருப்பதாக தெரிவித்தனர்.

இதேவேளை கட்சியின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அநுரா பண்டாரநாயக்காவிற்கு அதிக ஆதரவு இருப்பதாகவும், திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு 1983க்கு பின் கட்சியிலிருந்து வெளியேறி தனிக் கட்சிகளை செயற்பட முனைந்த சில உதிரிகளின் ஆதரவு மட்டுமே இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## "ஹெல உறுமய" குழு அங்கத்தவரை சேர்க்கிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தீவிர இனவாதம் பேசும் ஹெல உறுமய குழுவிற்கு அங்கத்தவர்கள் திரட்டப்பட இருப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திலக் கருணாரத்னா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ஒத்த சிந்தனை உடைய அமைப்புகளோடும், ஜாதிக சிந்தனயவின் டாக்டர் நளின். டி. சில்வா, குணதாச அமரசேகரா போன்றோருடனும் பேச்சுக்கள் நடத்த இருப்பதாக குறிப்பிட்டார்.

அத்துடன் ஹெல உறுமய ஒரு அரசியல் அமைப்பு அல்ல என்றும் நாட்டின் எல்லாப் பிரஜைகளுக்கும் ஒரே மாதிரி நீதி கிடைக்கச் செய்வதும், சிங்கள, முஸ்லிம் மற்றும் நியாயமாகசிந்திக்கும் தமிழர்களின் நலன்களைக் காப்பதுமே தமது அமைப்பின் நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

## மனித உரிமையை மதிப்பிட ஐ.நா.குழு கொழும்பு வரும்

(கொழும்பு)

சிறிலங்காவில் மனித உரிமைகள்பேணப்படுவதுதொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயற் கமிட்டி ஒன்று அடுத்த மாதத்தில் கொழும்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மனித உரிமை விவகாரங்களில் அக்கறை உடையவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்பியுமான மகிந்த ராஜபக்ஷா இதுபற்றி மேலும் கூறுகையில் எதிர்வரும் 6-ம்திகதி கொழும்பு வரும் என எதிர்பார்க்கப்படும் ஐ. நா.வில் மூன்று உறுப்பினர்கள் இருப்பார்கள் எனவும், அடுத்த பத்துத் தினங்கள்வரை தங்கியிருந்து சிறிலங்காவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அரசாங்க அதிகாரிகள் மனித உரிமையாளர்கள், மற்றும் சட்டத்தரணிகளுடன் பேச்சுக்கள் நடத்துவர் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்ததை விடவும் இப்போது மனித உரிமை பேணப்படுவதில் முன்னேற்றம் இருப்பதாக மனித உரிமை அமைப்புக்கள் குறிப்பிட்ட பின்னர் இக் குழுவினர்

## முஸ்லிம் காங்கிரசின்போக்கு ரெலோ அதிருப்தியாம்

(கொழும்பு)

தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் 'ரெலோ' கலந்து கொள்ளாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரச்சினைக்கு தமிழ்க் கட்சிகளும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஒருமித்த கருத்தை முன் வைக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ்க்கட்சிகள் முஸ்லிம் காங்கிரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டன என்றும்,

முஸ்லிம் காங்கிரசின் அண்மைக்கால போக்கு திருப்தியளிப்பதாக இல்லை எனவும்,

கடந்த வெள்ளிக்கிழமை ஏனைய தமிழ்க் கட்சிகள் முஸ்லிம் காங்கிரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையிலும் 'ரெலோ' கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவுப் பேருரையும் இசை நிகழ்ச்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று சேர் பொன்னம்பலம் இராமநாதனின் நினைவுப் பேருரையும் மாலையில் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்நினைவுப் பேருரையை பொருளியல் துறைத்தலைவர் கலாநிதி சண்முகநாதன் நிகழ்த்துகிறார்.

தொடர்ந்து மாலை நான்கு மணிக்கு செல்வன் பா கண்ணனின் வயலின்தனியிசை நடைபெறவுள்ளது.

செலவன் எஸ் நாகராஜன் மிருதங்மும், செல்வன் சதாவேல்மாறன் தபேலா, செல்வன் எஸ் சபேசன் தவில், செல்வன் வர்ணராமேஸ்வரன் கடமும் வாசிக்கவுள்ளனர்.

## கொல்லப்பட்டார்

பலப்பிட்டிய வெல்லபடரஜ்ஜவத்த என்னும் இடத்தில 90 வயது முதியவர் ஒருவர் வீட்டுடன் தீ வைத்துஎரித்துக் கொல்லப்பட்டார்.

இவர் வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது இவரது மருமகனே வீட்டிற்கு தீவைத்ததாக விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பார்சல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி, பரியோவான் முதலுதவிப் படையினர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருடன் இணைந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர்

முகாம்களில் தங்கியுள்ள மேற்படி மக்களுக்குச் சுமார் 2000 உணவுப் பொதிகளை நேற்று வழங்கினர்.

## மத்திய போக்குவரத்துச் சபை

## மக்கள் மயமாக்கல் விரைவில் பூர்த்தியாகும்

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் அரசின் திட்டம் விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

மத்திய போக்குவரத்துச் சபையை மீளமைத்து மக்கள் மயப்படுத்த அரசு மேலதிகமாக 35 கோடி 96 இலட்சம் ரூபாவை முதலிடும் எனவும் கூறப்படுகிறது

## கொலை என சந்தேகம் புதைத்த சடலம் மீட்பு

(மாத்தறை)

ரயிலினால் மோதுண்டு இறந்தார் எனக் கூறி அடக்கம் செய்யப்பட்ட ஒருவரின் மரணம் கொலை எனக் கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் மாத்தறையில் நடந்துள்ளது.

ஆட்டோசாரதியான ஹேவ அகுரல்ல சரத் மெண்டிஸ் என்பவரே இறந்தவராவார். இறந்தவரின் தாயார் நீதிவா...

இவர் அடித்து கொலைசெய்யப்பட்டுள்ளார் என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சந்தேகநபர் இருவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## இன்று

தேர்த்திருவிழா

## ஜேர்மனில் அகதிகள் மீது தாக்குதல் அதிகரிப்பு

ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கு எதிர்ப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன வலதுசாரி இளைஞர்கள் பேர்ளினில் நேற்று முன்தினம் யூதர்களின் கல்லறை ஒன்றினையும் வியட்னாமியர் தங்கியிருந்த விடுதி ஒன்றினையும் தாக்கினார்கள்.

இத் தாக்குதல்கள் தொகையில் குறைவாக இருந்தாலும் பொருளாதார ரீதியில் நலிவுற்றிருக்கும் இளைஞர்களிடையே அவர்களுக்கு பெரும் ஆதரவு இருப்பதாக தெரியவருகிறது

இப்போதுள்ள வேலையில்லா பிரச்சினையை 1933 ஆம் ஆண்டில் நாஜிகள் ஆட்சிக்கு வரமுன் இருந்த வேலை...

## சாய்ந்த மருது குண்டுவெடிப்பு

## விசாரணைக் குழு நேரடியாக பார்வையிட்டது

(கல்முனை)

கல்முனை சாய்ந்தமருது குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளரினால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி பி. டி வி விஜேஜயசேகர தலைமையிலான மூவர் அடங்கிய விசாரணைக்குழு வியாழனன்று சாய்ந்தமருதுக்கு சென்று சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரடியாகப் பார்வையிட்டது.

இவர்கள் மேற்படி சம்பவம் நடைபெற்ற பொழுது அப்பகுதியில் நின்ற பொதுமக்களிடமிருந்து விபரங்களைக் கேட்டறிந்து கொண்டதுடன் காயமடைந்து வைத்தியசாலையில் உள்ளவர்களையும் பார்வையிட்டார்கள்.

## 132 அகதிகள் இலங்கை திரும்பினர்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் 132 பேர் நேற்றுச் சென்னையிலிருந்து திருக்கோணமலைக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

...சரத் மெண்டிஸ் என பவரே இறந்தவராவார். இறந்தவரின் தாயார் நீதிவானிடம் சமர்ப்பித்த மனுவை அடுத்து நீதிவானின் உத்தரவில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு நடத்தப்பட்ட விசாரணையில் இக்கொலைச் சம்பவம் அம்பலமாகியது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இச் சடலம் ரயில் தண்டவாளத்தில் கிடக்கக் காணடபட்டு இரயிலினால் மோதுண்டதாலேயே இவர் மரணமானார் எனக் கூறி அடக்கம்செய்யப்பட்டது.

பிரேதம் மீண்டும்தோண்டி எடுக்கபபட்டு பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு

## நிரந்தர

களுககு வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கபபடவில்லைஎன்று கூறப்பட்டது

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள அம மாகாணததிற்கு வெளியே நிரந்தர இடமாற்றம் பெற விண்ணப்பித்து வருகின்றனர். இவர்கள்தற்காலிக இடமாற்றததின் அடிப்படையில் இங்கு கடமை புரிகின்றனர் எனபதும் குறிப்பிடத்தக்கது.

## இன்று தேர்த்திருவிழா

இன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் முன்னரைப் போலவே தேர்த் திருவிழா மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்று காலை 8.30 மணிக்கு துர்க்காதேவி அம்மன் தேரில் வீதிஉலா வருகின்றார். நாளை காலை 8 00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினமே கொடி இறக்கமும் நடைபெறும் அதனைத் தொடர்ந்து பத்தாம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வைரவர் பொங்கலுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது (07)

## வாகன

இந்த அதிகாரசபையின் சொத்துக்கள் விமானப்படையின் பொறுப்பில் விடப்பட்டிருந்த போது இத்திருட்டு இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

இத்திருட்டு பற்றி விசாரணை நடத்திய விமானப் படைப் பொலிசார் விமானப் படைத் தளத்தின் முற்பகுதியிலும், விமானப்படை வளாகத்தினுள் புதைக்கப்பட்ட நிலையிலும் திருட்டுப் பொருள்களைமீட்டுள்ளமைதெரிந்ததே

# அறிவித்தல்

நாளை 9 9.92 புதன்கிழமை நடைபெறும் மாபெரும் எழுச்சி ஊர்வலம் கொக்குவில் இந்துக்கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி அரசாங்க அதிபர் பணிமனையில் நிறைவுறும் இவ் ஊர்வலத்தில் சுருட்டுத் தொழிலாளர்கள் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

நன்றி

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் **நிர்வாக சபையினர்**

(சி/5021)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உரிமை அமைப்புக்கள் குறிப்பிட்ட பின்னர் இக் குழுவினர் வருகை தரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.

றாகக் கைவிடப்படவில்லை. உடனடியாக நடைமுறைப் படுத்துவது பிற்போடப்பட்டது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

மேலும் அப் பத்தியில்- செய்தித்தாள்கள் சில பொறுப்பற்ற முறையில் அவதூறான செய்திகளை வெளியிட்டு, புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவம் வெற்றியடையாது என்ற கருத்தை வளர்த்து, இராணுவத்தினுள் சச்சரவை ஏற்படுத்தி திட்டங்களையும், வியூகங்களையும்கைவிடும் நிலைக்கு இராணுவத்தைத் தள்ளப் பார்க்கிறது என்றும்,

மிகப் பிரதானமானதும், உணர்ச்சி மிக்கதுமான இராணுவத் திட்டங்களைப் பகிரங்கபபடுத்துவதற்கான காரணம் எமக்குத் தெரியவில்லை என்றும் இப்படியான செயல் இராணுவத்தின் மனோதிடத்தைப் பலவீனப்படுத்திப் புலிகளின் கையையே பலப்படுத்தும் என்றும்—

இப்படியான பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அவை தேசததுரோகிகள் போல் செயறபடுகின்றன. எந்த இராணுவ அதிகாரிகளுக்காகப் பரிந்து பேசினார்களோ அவர்களுக்கும், மக்களுக்கும், நாட்டுககும் இந்தப்பததிரிகைகள் நம்பிக்கைத் துரோகம் இழைக்கின்றன என்றும் திலக சிறி எழுதியுள்ளார்.

## அரசிற்கு

தலைமையிலான குழுவொன்றே செல்லக் கூடும் எனவும், வழமைபோல நிதி அமைச்சரோ அல்லது மூத்த அமைச்சர்களோ இம்முறை கூட்டத்திற்குச் செல்லமாட்டார்கள் எனவும் மேலும் தெரியவருகிறது.

...கியிருந்த விடுதி ஒன்றினையும் தாக்கினார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியல ரீதியில் கோசங்களை எழுப்பினாலும் விரக்தியின் உச்ச கட்டத்திற்கு அவர்கள் போய்விட்டார்கள் என அவர்களின் நடவடிக்கைகள் காட்டுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியில் இனவெறியைத் தூண்டிவிடும் வலதுசாரிப் பிரிவினர் எண்ணிக்கை ... யில்லா பிரச்சினையை 1933 ஆம் ஆண்டில் நாஜிகள் ஆட்சிக்கு வரமுன் இருந்த வேலையில்லாப் பிரச்சினையுடன் ஒப்பிட்டு பேசியுள்ளார் முன்னாள் அரசு பிரதிநிதி ஹெல்மட்சிமித். பொலிசாரும் நீதிமன்றங்களும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜேர்மனிக்குள் வெளிநாட்டு அகதிகள் நுழைவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

# திருமலை நகர் பகுதியில் பாதுகாப்பு தீவிரம்

(திருமலை)

திருக்கோணமலையின் நகரப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் திருககோணமலை பஸ் நிலையப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தே அங்கு பெருமளவு பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் இவர்கள் பஸ்நிலையம், ரயில் நிலையம் மற்றும் வீதிகளில் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர் பாதசாரிகள்,பயணிகளின் பொதிகள் சோதனையிடப்படுவதுடன் வாகனங்களும் பலத்த சோதனைக்குட் படுத்தப்படுகின்றன

## புலிகள்

படகை இயக்கும் முறைபற்றிய செயல்முறை விளக்கப் புத்தகத்தை எப்படியோ பெற்றுக்கொண்ட புலிகள் அதிலுள்ளபடியே இதனை இயக்கிச் சென்றிருக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்

இந்த அதிவேகப் படகு கடற்படையினரிடமுள்ள பீரங்கிப் படகுகள் நெருங்கமுடியாத அளவு வேகமானது ஆகும்.

இதனால் இப் படகைப் பயன்படுத்தி புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினால் கடற்படையினர் 24 மணிநேரமும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் விமானப் படையினரின் கடற் கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## வெல்லாவெளி

இத்தாக்குதலை மேற் கொள்ள இருந்த போராளிகளைக்கண்ட இராணுவத்தினர் இதனை முறியடிக்கும் நோக்குடன் அவ்விடத்திற்கு வந்தனர்.

இவர்கள் மீது விடுதலைப் புலிகள் ஐந்து நிமிட தாக்குதலை மேற கொண்டனர் இத் தாக்குதலால் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை விஜி (குழந்தைவேல் நாவற்குமார், அம்பாறை), வீரவேங்கை இனியவன் (யோசப்- தேவப்போடி மகேந்திரன் கோயில் போரைதீவு பெரிய போரைதீவு) ஆகிய இருபோராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவர்கள் மேற்படி சம்பவம் நடைபெற்ற பொழுது அப் பகுதியில் நின்ற பொதுமக்க... விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்

## K. K. வேலுப்பிள்ளை

காரைநகர் சிவன் கோவில் வீதியில் வசித்தவரும் கொழும்பு 74, செட்டியார் தெரு லிப்ரா யுவலரி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான க. கா. வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, விமலாதேவி, செல்வராணி, தனலட்சுமி, இராஜேஸ்வரி, தேவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, சண்முகரத்தினம், பாலேந்திரா, ஜெயகிருஷ்ணானந்தசிங், கந்தசாமி, குகதாசன், யோகரஞ்சினி ஆகியோரின் அன்புமாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் 10-09-92 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

913, மாவடி ரோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி ப. கனகசபாபதி

[3144]

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 07-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5554

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-5529, 28-1262, 28-0657, 24-5679, 27-1573, 26-1376, 27-5775, 41-1665, 26-6197, 41-9995, 24-8429, 41-8447, 24-4238, 26-7525, 22-6892, 26-1098, 24-1983.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

26-8917, 42 2364, 24-9390, 27-4162, 26-3321, 28-5039, 26-711, 24-1127, 24-1209, 41-5945, 24-4457, 24-1259, 24-336, 28-7978, 27-5535, 25-6941.